## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 73. ஸ்ரீநாம் தேவ் மஹராஜ்

பாண்டுரங்க அன்பர்களின் வரிசையில் முன் நிற்கும், மக்களால் மிகவும் மரியாதையுடன் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளப் படும் அன்பர்களில் ஸ்ரீநாம் தேவ் ஒருவர்.

இவரைப் பெற்றோர் யார் என்று தெரியவில்லை. பீமா ஆற்றின் கரையில் குழந்தையாய்க் கிடந்த இவரை எடுத்து வளர்த்தோர் ஸ்ரீமான் தாம்சேட் - குணா பாய் தம்பதியினர்.

க்ருஷ்ணாவதாரத்தில் பகவானின் உன்னத நண்பரான ஸ்ரீஉத்தவ் தேவின் மறு பிறப்பு என்பது மக்களின் நம்பிக்கை. க்ருஷ்ணன் வாழ்க்கையின் உண்மைகளைத் தனிப்பட்ட முறையில் உத்தவருக்குச் சொன்னதை மீண்டும் கலியுக மக்களுக்கு எளிய முறையில் எடுத்துச் சொல்ல இவர் அவதரித்தார்.

மிகச் சிறிய வயதில் தந்தை மூலமே ஆன்மீகப் பயிற்சிகள் பெற்றவர் நாம் தேவ். பிறவிப் பயனாய் எளிய மராட்டிய மொழியில் அனைவருக்கும் புரியும் படியான பக்திப் பாடல்களைப் பாடும் வரகவியாக வாழ்ந்தார்.இவரால் மராட்டிய பக்தி இலக்கியத்துக்கு ”அபங்கம்” வகை இலக்கியம் அறிமுகம் ஆனது.

சிறுவனாக இருந்த போதே பாவ பக்தியில் ஊறிப் போய் பாண்டுரங்கனின் தெய்வீகத் திருமேனி வாய் திறந்து இவர் ஊட்டியதை அனைவரும் காண உண்ண வைத்தவர்.அதனால் இவரது தந்தை இவரையே தன் குருவாக வழிபட்டாராம்.

இவருக்கு உரிய பொருளைக் கொடுத்து இறைவனே ராஜா பாய் என்ற பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்து அதன் மூலம் அவளது அப்பாவின் பணத்திமிரை அடக்கினான்.

தூய பாவ பக்தி மூலம் ரசவாதம் கைவரப் பெற்றார்.ஆனால் அதை அவர் ஒரு போதும் பயன்படுத்தியதே இல்லை.தன் மனதை பக்தி என்ற ரசவாதம் மூலம் ப்ரஹ்ம தத்வமாக மாற்றினார்.

ஒரு முறை ஆஷாட ஏகாதசிக்கு அன்னதானம் செய்ய இறைவன் பக்கத்து ஊர் மளிகைக் கடைக்காரராக வந்து ஒரு மாட்டு வண்டி நிறைய சாமான்களை இவர் வீட்டின் முன் இறக்கிச் சென்றதை ஊரே பார்த்துக் கொண்டாடியது.

இவரது மனைவிக்கு ப்ரசவ வலி வரும் காலத்தில் மழையும் காற்றும் இவர்தம் குடிசையை பறக்கச் செய்ய பண்டரீ தேவன் ஒரு தட்டியை நிறுத்தினான்.

ஜனா பாய் தேவியை ஸ்வீகாரம் மூலம் மகளாக ஏற்றுக் கொண்டு பெரியாழ்வார்-ஆண்டாள் போல இவர் பக்தியைப் பரப்பிப் பின்பற்றினார்.

சதா பாண்டுரங்கனிடம் பேசும் தெய்வீக மெய்யுணர்வைப் பெற்று ஆன்மீகத்தை அபங்கம் மூலம் தேசத்தில் பரப்பி முக்தி பெற்றார்.

ஸ்ரீமான் ஞானதேவுடன் இணைந்தும் ஆன்மீகத்தை இவர் பரப்பினார்.

ஹரி ஓம்!